பெற போய்விட்டால் பள்ளிகள் நல்லமுறையில் நடப்பதில்லை. ஆகவே எதிர் காலத்திலாவது தனிப்பட்டவர்களை வைத்து சமைக்கிற நிலையை உண்டாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி விருத்தாசலம் பற்றியது. தென்னார்க்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் சமையல் கூடங்களை வைத்து மதிய உணவை தந்துகொண்டு வருகிறோம். ஆகவே அங்கே தவறு நேர இடமிருக்காது.

திண்டிவனம் வட்டத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்ட தனியார் கடன்கள்

* வினா எண் 410.—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் தங்களது தனியார் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) அதில் எத்தனை பேர்களது கடன்கள் தள்ளுபடி செய்யப் பட்டன ?

(இ) எத்தனை பேர்களது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 2,794.

(ஆ) 28.

(இ) 2,489.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணம் கோருபவர்களின் வருமானத்தை முடிவு செய்வதில் பல கோளாறுகள் எற்படுகின்றன. திண்டிவனம் வட்டம் விடூர் என்ற கிராமத்தில் அரிசன காலனியில் வசிக்கும் ஏழுமலை என்பவருக்கு 65 சென்ட் தான் புஞ்சை நிலம் இருக்கிறது. கடன் நிவாரண சட்டத்தின் கீழ் அவருக்கு அந்த உதவியை தரமுடியாது என்று உதவி ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூறப்பட்டிருக்கிறது. மேல்முறையீட்டிற்கு அவருக்கு வசதியில்லை. இதுபோன்ற கோளாறுகள் எற்படாத வண்ணம் இருப்பதற்கு அரசு இதை பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,800 ரூபாய்க்கும் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரணம் தரப்படுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டுகிறபோது 65 சென்ட் நிலம் பெற்றிருக்கிற ஒருவருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அதை எதிர்த்து ஆர்.டீ.ஓ. அவர் களுக்கு அப்பீல் செய்யலாம். இதற்கு பணச்செலவு இல்லை, மனு மட்டும் போட்டால் போதும். என்னிடமும் குறிப்பை தந்தால் நானும் நடவடிக்கை எடுப்பேன்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் அடகுக் கடைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளைப் பெற முடியாமல்—அந்த அடகுக் கடைக்காரர்கள் கடைகளை மூடிவிட்டு வெளியூர் சென்று விட்ட காரணத்தினால்—அந்தச் சட்டத்தின் மூலமாக அவர்கள் அனுகூலம் பெறலாமென்றாலும், நடைமுறையிலே அவர்களுக்கு அந்த அனுகூலம் கிடைக்காத நிலை இருக்கிறது. கடைகளை மூடிவிட்டு அவர்கள் வெளியூர் சென்றுவிட்டார்கள். அவர்களுக்கு அந்த நகைகளை திரும்ப வாங்கிக்கொடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? அதோடு கடைகளை மூடிவிட்டு வெளியூர் சென்றவர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஏழைகளிட மிருந்து அந்தப் பொருட்களை வாங்கி—பிளட்ஜ் செய்த அந்தப் பொருட்கள் மீது—கடன் தருகிற சிலர் குறிப்பாக மார்வாரிகள் என்று சொல்லப்படுகிற சிலர் அந்தச் சட்டத்திலிருந்து தப்புவிப்பதற்காக கடைகளையும் மூடிவிட்டு இருக்கின்ற வீட்டையும் காலிசெய்துவிட்டு எங்கேயோ சென்றுவிட்டார்கள் என்ற தகவல் அரசுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப் போல சட்ட ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தப் பொருட்களை அந்த ஏழைகளுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கும், குற்றவாளி களைக் கண்டுபிடித்து தண்டனை கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ் சலுகைகள் பெறுவதற்காக சொத்து மதிப்பு அடிப்படையில் வருமான அடிப்படையில் அவைகள் வழங்கப்படுகின்றன. வருமானம் எவ்வளவு என்றும் சொத்து மதிப்பு எவ்வளவு என்றும் அவர்கள் வருவாய் ஆய்வாளரிடமிருந்து கேட்டு வாங்கவேண்டியிருக்கிறது. அதன் காரணத்தினால் காலதாமதம் ஏற்படுகிறது, இவ்வாறு காலதாமதம் ஏற்படுவதால் கடன்வழங்கும் தாசில்தார்கள் அந்த மனுக்களை ரத்து செய்து விடுகிறார்கள். எனவே ஒன்று கடன் வழங்குகின்ற அந்த தாசில்தார்களே

சொத்துவிவரங்களைப் பார்த்து அந்தத் தகவலை பெற்றுக்கொள்ளும்படியோ அல்லது சொத்து மதிப்பு எவ்வளவு என்பதை வருவாய் ஆய்வாளர் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் 15, 20 நாட்களுக்குள்ளாக கொடுத்துவிட வேண்டுமென்ற ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 15 தினங்களுக்குள் என்று அந்த அளவுக்குள் முடிக்கவேண்டுமென்று அரசு ஆணையிட முடியாது. தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தார் அவர்களுக்கு இருக்கும் பற்பல பணிகளை மேற்கொண்டு வருகிறபோது இடையே இதைப் பார்க்கிற போது அதற்காக குறைந்த அளவு காலக்கெடுவை விதிப்பது முடியாத காரியம். கடன்பட்டவர்கள் சார்பிலே என்ன சொத்து இருக்கிறது என்று மனுக்கள் மூலமாகக் கேட்டு அதற்குப் பிறகு தான் அந்த விவரங்களைக் கொடுக்க முடியும். அந்த முறையில் தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். ப்ரீ லீகல் எய்ட் போர்டு—இலவச சட்ட ஆலோசனைக் குழு—வட்டந்தோறும் அந்தப் பணியை மேற்கொள்கிறது. குறிப்பாக ஏழைகள் கேட்கிறபோது அவர்கள் ஆலோசனை கூறி உதவியைச் செய்யவேண்டி பணிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த 15 தினங்களாக அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே இந்தப் பிரச்சினைகள் தீரும் என்று அரசு நம்புகிறது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, ஏழை எளியவர்கள் தாங்கள் அடகுக் கடைகளில் வைத்த பொருட்களைப் பெறுவதற்கு பறக்கும் படை என்ற ஸ்தாபனம் ஏற்பட்டு அந்தக் காரியங்களிலே தலையிட்டு நகைகளை சுலபமாகப் பெற்றுத்தருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அந்த பறக்கும் படை அரசின் அமைப்பாக எங்கும் இல்லை.

வேலூர் மத்திய சிறைச்சாலையில் அச்சடிக்கும் பிரிவு, பைண்டிங் பிரிவுகளை ஏற்படுத்தும் திட்டம்

* **வினா எண் 411—திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் மத்திய சிறைச்சாலையில் சிறிய அச்சடிக்கும் தொழில் புஸ்தகம் நோட் பைண்டிங் செய்யும் தொழில் போன்ற சிறிய பிரிவுகளை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?